# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## FIRST YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL)
## 2009 / 2010 HELD IN JUNE / JULY - 2010

### TML 1.11 – இலக்கிய நயப்பும் குறித்த பாடப் பகுதிகளும்

பகுதி 'அ' வில் உள்ள இரு வினாக்களுக்கும் விடை தருக. பகுதி 'ஆ', 'இ' இரண்டிலும் குறைந்தது ஒரு வினாவினையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

### பகுதி – அ

01. "மனித உணர்வுகளையும் அனுபவங்களையும் மொழிவழியாக வெளிப்படுத்தும் கலை வடிவமே இலக்கியமாகும்" - இக்கூற்றினை விமர்சனரீதியாக நோக்குக.

02. அ) மேல்வரும் செய்யுள்களின் பொருளை இக்கால மொழி நடையில் எழுதுக

i.
திரைநீர் ஆடை இரு நில மடந்தை
அரைசு கெடுத்த வலம் வரும் அல்லற் காலை
கறை கெழு குடிகள் கை தலை வைப்ப
அறைபோகு குடிகள் ஒரு திறம் பற்றி
வலம்படு தானை மன்னர் இல்வழி
புலம்பட இறுத்து விருந்தின் மன்னரின்
தாழ்துணை துறந்தோர் தனித்துயர் எய்த
காதலர் புணர்ந்தோர் களிமகிழ்வு எய்த
குழல் வளர் முல்லையிற் கோவலர் தம்மொடு
மழலைத் தும்பி வாய் வைத்து ஊத....

ii.
கங்கை இரு கரை உடையான்
கணக்கு இறந்த நாவாயான்
உங்கள் குலத் தனி நாதற்கு
உயிர்த் துணைவன் உயர்தோளான்
வெங்கரியின் ஏறு அனையான்
விற்பிடித்த வேலையினான்
கொங்கு அலரும் நறும் தண்தார்க்
குகன் என்னும் குறி உடையான்

iii.
கற்காணும் திண்மையான்
கணக்கிறந்த நாவாயான்
அற்காணி கண்டனைய
அழகமைந்த மேனியான்
மற்காணும் திரு நெடுந்தோள்
மழைகாணும் மணி நிறத்தாய்
நிற்காணும் உள்ளத்தான்
நெறி எதிர் நின்றனன் என்றான்

ஆ) மேல்வரும் கவிதையில் நீர் காணும் நயத்தினைச் சுருக்கமாக விளக்குக.

உறவு !

மரணித்துப் போனஎங்கள்
மானாகப் போடிப் பெரியப்பா,

நீர் ஓர் பெரிய மனிதர்தான்!
பெட்டி இழைத்தும்,
பிரம்பு பின்னல் வேலைசெய்தும்,
வட்டிக்குளத்து வரால் மீன் பிடிக்கக்
கரப்புகளும் கட்டி விற்றுக்
காலத்தை ஓட்டும் ஒரு கிழவன்.
என்றே நம் ஊரறியும்,
நேற்றுவரை.

பத்துநாள் தொட்டுப்
பகலிரவாய்ப் பாய்மீதில்
வைத்தியமே இன்றி,
வயிற்றாலடியோடும்,
சத்தி எடுத்தும், வாய்
சன்னீ பிசத்தியும்,
செத்தும் பிழைத்தும் கிடந்தீர்
சுவரோரம்.

'எட்டுநாளாக இரணம் எதும்
குடலுக்குட் செல்லவில்லை!'
எனஉருகி உம்மனைவி வள்ளி,
புளுங்கல் அரிசவிந்த வெந்நீரை
அள்ளி உமக்குப் பருக்குகையில்
நீர் - அவளை,
ஐம்பது ஆண்டாய்
அனுபவித்துக் கொண்டதற்கும்,
ஒன்பது பிள்ளைகளை உற்பவித்துப்
பெற்றதற்கும்,
ஈற்றில் உமக்காய்
இரவு பகல் கண்விழித்து,
ஊற்றை அளைந்ததற்கும்
உம்குறைகள் கேட்டதற்கும் ஈடாக,
ஓர்வார்த்தை யேனும் இயம்பாமல்
போய்விட்டீராமே!
புலம்புகிறாள் வள்ளியம்மை!

நாய்படாப் பாடுமது
நோயிலவள் பட்டதுண்மை
என்றாலும்.... ஓர்வகையில்
ஆனந்தம் வள்ளிக்கு!

என்னவென்றால் -
தன்புருஷன் மானாகப் போடிக்கும்
எத்தனைபேர் சொந்தம்! அதோ,
எக்கவுண்டன், எஞ்சினியர்
வைத்திய கலாநிதிகள்
வர்த்தகர், பேராசிரியர்
சத்தா சமுத்திரம்தான் சாதிசனம்
என்பதனால்!

தந்திகிடைத்து
மிக நொந்துபட்டுவந்தார்கள்.
அந்தி வரைக்கும்ஏதும்
ஆகாரம் தின்னாமல் குந்தியிருந்தது,
குளறி அழுதார்கள்!
ஐந்தாறுகாரில்
இரவே ஊர்போய்விட்டார்!
எத்தனைபேர் சுற்றமிந்த
ஏழைக் கிழவனுக்கு!
இத்தனைநாள் மட்டுமிது
யார்க்கும் தெரியாது!
உண்மையினைக் கண்டெங்கள்
ஊர் - விரலை மூக்கில் வைக்கும்
வண்ணம் மறைவாக வாழ்ந்தீர்!
இறவாமல்

இன்னும் உயிரோ டிருந்தீரே யாமாகில்
என்ன வகையாய் அறிவோம் உறவினரை!
செத்தாலும் செத்தீர் நும்
செல்வக் குடும்பத்தைப்
பத்தியமாய்ப் பார்த்திந்தப்
பாரில் வழங்கிவரும்
உண்மை உறவறியும் ஊர்!

## பகுதி – ஆ

03. பரதன், குகன் இருவரும் இராமனிடத்துக் கொண்ட பேரன்பினை கம்பன் சித்திரிக்குமாற்றினை குகப்படலத்தை ஆதாரமாகக் கொண்டு விளக்குக.

04. உமறுப்புலவரின் பாத்திர வருணனைத் திறனை, சீறாப்புராணம் நபிப்பட்டம் பெற்ற படலத்தின் அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடுக.

<u>அல்லது</u>

சிலப்பதிகாரம் - அந்திமாலை சிறப்புச் செய் காதையில் கண்ணகி, மாதவி ஆகியோரின் இருவேறுபட்ட நிலைமைகள் சித்திரிக்கப்படுமாற்றினைத் தெளிவுறுத்துக.

## பகுதி – இ

05. தமிழ்க் கவிதை வரலாற்றில் பாரதி ஏற்படுத்திய மாற்றங்களை விளக்குக.

06. புதுக்கவிதையின் தந்தை' எனப் பிச்சமூர்த்தியைப் போற்றுவதன் பொருத்தப்பாட்டினை ஆராய்க.

07. புதுமைப்பித்தன் சிறுகதைகளை அடிப்படையாகக் கொண்டு அவரது படைப்பாளுமையை மதிப்பிடுக.

08. தமிழ்க் கவிதை வரலாற்றில் மஹாகவியின் வகிபாகத்தை மதிப்பிடுக.

*****